# மாரியம்மன் உற்பத்தி



சரஸ்வதி புத்தகசாலை
175. செட்டியார் தெருவு
கொழும்பு.

உ

தேவி துணை

சகல சமயத்தாருக்கும் பொதுவான

# மாரியம்மன் உற்பத்தி

மாரியம்மன் காவியமும், குளுத்தியும் சகல விஷ சன்னி

முதலியவைகளும் குளை அடியும் அடங்கியது.



## விநாயகர் துதி

உகத்துக் காதியாய் தேவருக்காதியாய் உலாவச்
சுகத்துக் காதியாய் சுரர்களுக் கீசராய் சுடரும்
மகத்துக் கீசராய் கணங்களுக் கீசராய் மதிப்போர்
அகத்துக் கூடிய கணேச நின்னடியிணைத் தொழுவோம்.

## சுப்பிரமணியர் துதி

ஓராறு சென்னி ஒருமுருகா வென்பதற்குத்
தீராத வல்பிணிநோய் தீருமே போராட
கொக்கரித் துடற்கறுத்து கொக்கரக்குரைத்துணித்த
விக்கிர் திருக்கரத்து வேலே.

# முகவுரை.

இந்நூல் உலகத்திலுள்ள ஆன்மாக்களுக்கு வினைப்பகுதியினால் நினையாப்பிரகாரமாக உண்டாகும் அவஸ்தையாகிய சுரம், கண்நோய், வைசூரியென்னும் தொற்று நோய் கண்ணூறு, நாத்திருஷ்டி, சின்னம்மை, பெரியம்மை, முதலிய நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளும், மாட்டு ஆட்டுப் பட்டிகளில் உண்டாகும் கூப்பிடுவானென்னும் கோதாரி நோய் முதலியவைகளும் நம்மீது சத்துருக்கள் நெருங்கிய போதும், இந்த **"மாரியம்மன் காவியம்"** **'குளுத்தி"** இவைகளை மிகுந்த பக்தியுடன் தூபமிட்டு பரிசுத்தமான இடத்தில் வைத்துப் பாராயணம் பண்ண நிவர்த்தியாவதுமன்றி, தனி வழிகளில் போகும்போது பாராயணம் 'பண்ணிக்கொண்டு போனால் துஷ்டப்பிசாசு, துஷ்ட மிருகம் விஷஜெந்துக்கள் விலகிவிடும். நம்பிக்கையுடன் பாராயணம் செய்து பயனடைவார்களாக! சுபம்!! சாந்தி!!!

# மாரியம்மன் உற்பத்தி

## அகவல்

ஓம் பூவினியமாதே கேளாய் உன்பொன்னடி காணவந்தேன்
மேவிய மாரியம்மா திருவுளம் பொருந் தொண்ணுதோ
ஆதியாய் அதன்முடிவாய் அண்டபகிரண்டமாய் ஐம்பத்தோ ரட்
[சரமாய்
சோதியாய் வெட்டவெளியாய்ச் சொருபமாய் நின்றவளே
ஊத்துக் காடமர்ந்தவ்ளே, உதிரபெலி கொண்டவளே
பலவேஷம் கொண்டவளே பரசுராமனைப் பெற்றவளே
சத்தி நூற்றிருபதும் சமயம் பதினாறும் மிச்சமாய் மேலாயிருந்
[தவளே
கெந்தம், பர்வதம், சடாமுனியும் மாறொருகையும் மழுவொருகையும்
சங்கொருகையும் சக்கரமொருகையும் பச்சைத்திரு வில்லும்
பறந்தோர் வேப்பிலையும்
இச்சையுடன் சென்றேகவரம் பெற்றவளே ஆதிபராபரியே
அரனுடைய தங்கையம்மா நாதமறவோங்காரி நற்பொருளால்
[நின்றசக்தி
தக்கன் மகளாய்த் தானுதித்த வீரசக்தி பின்னும்
மலையரசன் பிள்ளையென வேயுதித்தாய் அன்னநடை மாதுமை
யுமகிருந்தா ளெங்களம்மை கும்பத்துமாரியென்றும் கோவிந்தன்
[தங்கை
யென்றும் ஏழுபேர்கன்னியென்றும் ஏகபரா சக்தியென்றும்
வார்ச்சி சடைச்சியென்றும் வல்லபத்ர காளியென்றும்
ஆழிமால் தங்கை யென்றும் ஆச்சி மீனுட்சியென்றும்
துர்க்கை அபிராமி யென்றும் சொல்லரிய பேச்சியென்றும் கண்
வந்துதித்த கண்ணகைத்தாய் யம்மையென்றும் [ணிலே
பரமன் திருவருளால் பாருலகில் பிறந்தாய் அதிகதவமாக வம்
[மையுமை
வீற்றிருந்தாள் வீற்றிருந்தா ளெங்களம்மன் வெகுநாள் தவமாக
வரம் வேணுமெனக் கேட்டாரே ஈஸ்வரனுர் [என்ன
பாராமல் வந்தெனக்குப் பதினெட்டு முத்துவகைதாரா யெனக்
[கேட்டாள்
தார்குழலும்மப்போது அப்போ பரமேஸ்பரன் அன்பாய் மனதிரங்கி

கடுகுதிரி நெல்லுதிரி பனேயேறி பொக்கிளிப்பான்
இந்த நல்ல முத்துவகை ஈஸ்வரிக்குத்தான் கொடுத்தார்
கொடுத்த நல்ல முத்துக்களைக் குறையாமலே வாங்கி
இந்த நல்ல முத்தருமை யானறிய் வேணுமென்று
ஈஸ்பரனுர் மேனியிலே கனகமுத்தைத் தானெறித்தார்
நெருப்புத் தணலாக நின்றெரிய முத்துவகை
அப்போ பரமசிவன் அதுபொறுக்க மாட்டாமல்
பத்தினியே நீ யெனக்குப் பாரமுத்தை ஏனெறிந்தாய்
நீயேயெறிந்த முத்துக்களை நீ இறக்கிவிடு பத்தினியே
வயதுசிறு பாலகர்க்கும் வயோதிபத்தோர் தங்களுக்கும்
இந்தநல்ல முத்துக்களைப் போடாதே பத்தினியே
வம்புகளுரைத் தோர்க்கும் வாழ்வினைக் கெடுத்தோர்க்கும்
துன்பங்கள் செய்தோர்க்கும்
தொடர்ந்து நஞ்சி யிட்டோர்க்கும் கற்புகளித்தோர்க்கும்
காமிநெஞ்சோர் தங்களுக்கும் இந்த நல்ல முத்துக்களை
போய் எறியும் தாயாரே என்று வாக்குமே தான்கொடுத்தார்
வரமுடைய அம்மனுக்கு.

*முற்றிற்று.*

## மாரியம்மன் காவியம்

### விநாயகர் துதி

அறிவு மிறிவு கிலியு மான சிவசோதி
ஆதியுடனே நடன மாடுமக மாரி
கரியமால் தங்கையென வந்தமக மாரி
காரணி பதம் பணிந்தே தமிழ் வழுத்த
உரிய தொருகரி முகமுமனைய குடவயிறும்
ஓதரிய நல்வாயுமான மும்மதமும்
பெரியதொரு வெண்மரு பழமுயர்
விகடதட பங்கயத் தும்பி முகனைப் பணிகுவோமே.

# நூல்

அகில முழுதும் கிருபையான திரிசூலி
ஆதியுடனே நடனமாடு மகமாரி
கரியலர் சவுந்தரி சடாதரி மாதங்கி
சாயுட்சிய தேவி உன்தாளினை வழுத்த
வரைதங்கு மாதுமையும் மாலுமரனும்
வள்ளி மணவாளன் மாதுலட்சுமியும்
ககனமுயர் கன்னனூர் கண்ணகியும் மனதிலுறை
காரணியு மெப்பொழுதுமே உதவி செய்வார்.
ஆதி அபிராமி கௌமாரி திரிச்சூலி
அரலோக பரலோக ஆனந்தரூபி
சோதி மாதவி மாகாளி ரணசூலி
தோடவில் நற்கருடரூட நாடுபரதேவி
வேதனைகள் நோய்பிணிகள் தீரவருமாரி
மேவரிய பேச்சியென தாயனைய சக்தி
பாதகமலர் துணையதாக அருள் நல்குவாய்
பாரிலுயர் வீரபத்ரகாளி என்தாயே
இந்துமுடி வேணி அரனோடு நடமாடும்
ஈசுபரி ஏகபரை சோதி நவகாளி
விந்தை மகிடாசூரன் தன்னுயிர் வதைத்த
வேதாந்தரூபி வினைதீர வருமாதே
என்தனக் குற்றவினை மக்களுக்கன் பாக்
ஏகமுறு கோதாரி வராம லென்றும்
சந்தோஷ மாகவே நற்கிருபை தருவாய்
தாயான நவகோடி சக்தி என்தாயே
ஈராறு நற்கரத்தவனை அருள்பவளே
ஏகமுறு மீசருடனென்று முறைபவளே
தீராத நோய்பிணிகள் தீர்க்குமென் தாயே
சேரிதனையே நிதங்காக்கு மென்தாயே
நாராயணன் தங்கை யானவளும் நீயே
நாலுமறை ஆகமபுராணம் நீதாயே
ஆராமை நோய்பிணிகள் தீரவருளம்மா
ஆதியே சிவமுத்து மாரி என்தாயே
உம்பர்தொழு மம்பிகை எனும் சக்திநீயே
ஓதரி வடவை தவசுற்றவளும் நீயே

நம்பியே காத்தானை ஈன்றவளும் நீயே
நாத ஓங்கார மறையானவளும் நீயே
தும்பி முகனைத் தந்த சோதிபரை நீயே
சூட்சாதி சூட்சமுறு சுந்தரியும் நீயே
அம்புவியிலென்று மெமை ஆள்பவளும் நீயே
ஆதியே சிவமுத்து மாரி என்தாயே
ஊளிவினை கோதாரி தீர வருளம்மா
உத்தண்ட தண்டி கேம்பீரி நீ அம்மா
நாளுமுன் மக்கள் மனை காக்க நினை அம்மா
நாரிகெவுமாரி திரிசூலி நீ அம்மா
ஏளுலகு லுற்ற உயிருக்குயிர் நீ அம்மா
எங்கு மறவேவளத்தா நீ அம்மா
சூளுவருபரிகலத் தோகை நீ அம்மா
சோதியே சிவமுத்துமாரி என்தாயே
எட்டெழுத் தட்சர மதானவளும் நீயே
ஏகமுறு மஞ்செழுந் துற்பனமு நீயே
திட்டமுறு நவகோண சத்திபரை நீயே
திருமேவும் ஐம்பத் தோரட்சரமு நீயே
நட்டணைய தான் நவசக்தி பரை நீயே
நாற்பத்து முக்கோண நாயகியும் நீயே
இட்டமுறு கோதாரி தீர்ப்பவளும் நீயே
ஏகமுறு சிவமுத்து மாரி என்தாயே
ஏகமா மீசரிடமென்று முறைபவளே
ஈசருக்கே முத்தெறிந்தவளும் நீயே
நாகமணி நோய்த்துயர் தணித்தவளும் நீயே
நாற்பிரப் பங்கோல் பிடித்தவளும் நீயே
பாகமுறு பதினறு கோணபரை நீயே
பகருடுக் கொடுகரக பத்தினியும் நீயே
அகமுறு வேப்பநகர் காத்தவளும் நீயே
ஆதியே சிவமுத்து மாரி என் தாயே
ஐயமகள் வேப்பநகராதி சிவ சக்தி
ஆனந்தமாய் நடனமாடு மகமாரி
ஒய்யதொரு நற்சுடலை காத்தரென நற்சூலி
ஓதரிய பிணமருந் தும்கண்ட தண்டி
அய்யமுறு பரிகலத் தழகு பெற பேச்சி
அரனேடு திருநடன மாடுமகமாரி

வையமதி லென் கவலை மாற்றி அருளம்மா
மாதுவளர் பேச்சியென வாழு மாதாவே
ஒழிமேவு மாதி ஒழியாயிருந்தாயே
ஓதரிய நற்சுகமே புரிந்தாயே
வழியான கரகம துடுக்கை பெற்ருயே
வன்னமுயர் பொற் பிரம் போடெடுத்தாயே
எழியேனை அஞ்சலென் றருள் புரிந்தாயே
என்றுமுன் மக்கள் மனை காத்திருந்தாயே
அழியாத வேப்பமற் குலைபிடித்தாயே
ஆதியே சிவமுத்து மாரி என் தாயே
ஓதுவே னுன்புகழை ஆதி அபிராமி
ஒன்றுமறியா ஏழை யுன்னடியே நம்பி
நீதியாய் என்றுமே காக்கநினை அம்மா
நீள்புகள் சடைச்சி என நின்ற பத்தினியே
வாதுபுகழ் தக்கனுயிர் மாளவைத்தவளே
வையமதி லாங்கிஷம் தனை யுகந்தவளே
வேதனைகள் வாராமல் நீ கிருபைபுரிவாய்
மேவரிய பேச்சியென வாழுமாதாவே
ஒளவும் நௌவும் ஐயுமான சிவசக்தி
அறியும் இரியும் கிலியும் மானவளே
உவ்வவும் நௌவும் யவ்வுமான உட்பொருளே
ஓம் நமசிவாய மதி லுற்றிருந்தவளே
செவ்வையுறு மாகாளிசிவ முத்துமாரி
தேவியே பேச்சி பரநாதி யபிராமி
சவ்வும் நௌவனைய பதமே பணிந்தடியேன்
சாற்றவே வந்த வினை தானகற்றிடும்
அக்கரமணிந்த பரனுரிட மிருந்த நீ
அம்மையென அன்பருக் கருளே கொடுத்த நீ
சக்கர கரத்தவன் தங்கையென வந்த நீ
தந்திமுக நாதனோடு தம்பியருள் தாயும் நீ
தக்கவினை கோதாரி தானலைய வைத்த நீ
தாய் தந்தையான நீ சற்குரு தெய்வம் நீ
மைக்கருங் குளலனைய மதுரை வஞ்சியரே
மலையரசன் மகளனைய பாதுபத்தினியே
கந்தமிகு காவேரிப்பூம் பட்டணத்திலுயர்
கருதுபுகழ் மாணுகர் மகளனைய திருவே

வந்துமீன் வனுயிர் வதைத்து மதுரைப் பதியில்
வல்வைரி எழுப்பியே வழரிடைய சேரி
வெந்து மெரியாமலே நல்வரமளித்து
மேதினி தளைக்க வரமானது கொடுத்து
சந்தோஷ மாகவே கிருபை தந்தருள்மேவு
சத்தியே நாக மங்களையான திருவே
நகரமுதலான சிவசோதி யரனிடத்
தரிய பொற் கரமதுடுக்கை பொற்குளையும்
வகரமுயர் பொற்பிரப்பங்கோல் மிகுந்த
பலவரமு மேற்பெற்ற வதீகதவ மயிலே
நகரமுட னெமதுகிளை மக்களை மனைசுற்றம்
நன்மையொடு வாழகவருள் பண்ணு தமிழம்மா
அகரமுதலான அவ்வும் சவ்வுமான
ஆதிவள ராதியே அன்னை கண்ணகையே
சஞ்சல மகற்றி எனை ஆளவந்தாயே
சத்துரு சங்கரியே சகல கலைமாதே
கஞ்சமலர் மீதிலுறை கன்னியே பூலோக
காரணியே சவுந்தரி கனக பத்தினியே
மிஞ்சிவரு நவசக்தி வீரி கௌமாரி
மேலரிய பரிகலை கழுகுபெறு பேச்சி
தஞ்சமென் றவர்வினை தனித்தருளு மயிலே
தாயான நவகோடி சக்தி என் தாயே
ஞயமருவு நாரணி பயங்கரி துரந்தரி
நளின கெம்பீரி நறைவீசு தொடைமேவு
பசலைசெறி மார்பழகி பஞ்சாட்சரத்தி
பரிபுர மலர்ப்புய மங்கய நிறத்தி
கயல்கொள் வரிவிற்புருவ மதிநுதலினழகி
காரணி தயாபரி கருணகரத்தி
தயவுவைத் தென்றுமே அருள்கிருபை புரியும்
சத்திபரை உத்தமி கறுப்பாயி யம்மானே
இடமுடை சிவசோதி எங்கெங்கு மாகி
எவ்வுயிர் தமக்குமிக இன்பமது நல்கி
அடவுசெறி அக்கினி தனித்துமே எந்தனுக்
கதிகவரம் நல்கியே அன்புதந் தாழ்வாய்
மடல்விள செழிங்கமல மாலை மார்பழகி
பூரணமதுராபுரியில் வந்தரென சூலி

படவரைகளிசைய மிகு பல்லிய முளக்கமுறு
மதுரை மீனாட்சியென வந்த பத்தினியே
இணக்கமுடனே தேவர் புட்பமது சிந்த
எழுலகிலுள்ள வர்களும் பதமிறைஞ்ச
வணக்கமுடன் மாமுனிவர் வந்தடி வணங்க
வளர்சித்தர் கின்னரர்கள் மகிழ் சொற்களிசைய
மனக்கடுமை பரிகலம் வந்து புடைசூழ
மாதவர் வணங்க மகிழ்வோடினி திருந்து
இணக்கமுட னேழுபேர் மாரியென வந்த
ஏகபரை சோதியே ஆதி அம்பிகையே
தரையெங்கு முன்கிருபையா யிருந்தாயே
தக்கபுகழ் மாரிமகனாக வந்தாயே
உரைசெய்யும் மக்கள்மனை காக்க வந்தாயே
உண்மைதரு மாறுமுகமாக வந்தாயே
வரைதங்கு காசினிகள் வாழவந்தாயே
மாலைதனையே மனதா யுகந்தாயே
கரைதங்கு மீரேழு புவன நாயகனே
காரணச் செல்வமுறு காத்தவராயனே
நகரெங்கு மணிதங்கு சிவகங்கை யனிபொங்க
நரர்துன்ப மகலவுயர் பரையன்பு பெருக
இயல்தங்கு தொட்டியச் சின்னானை வென்றுமுன்
புயல்தங்கு வலயமெங்கு மியல் சங்கை பரவ
மகனன்பு பெறமாலை தனையன்று மணமென்று
வருதுங்க மகிபனே மாரிதன் மகனே
ககனங்கள் செகமெங்கு முவர்சங்கை பெறவந்த
காரணச் செல்வமுறு காத்தவராயனே
பலனன்பு பெறவந்த பரமன் தனதருள் தங்கு
பகர் சங்கை உமைமைந்த னெனவந்த பரனே
தலைதங்கு முமைமைந்த னியர்சங்கை பெறவுந்தன்
கதிதந்த சிவவிந்து எனபந்த புகளான்
சிலையுந்து பலர் விந்து வருவந்து மசுராது
சிரநொந்து விழ அன்று பெருகின்ற திருவே
ஆலைபுந்து கோதாரி அலைய அருள் புரிவாய்
ஐயனாரென வந்த ஆதி உத்தமனே
மதிதங்கு பானன்பு புரிகின்ற மிறையே
வகைதங்கு சிவதொண்டர் பணிகின்ற படியே
துதிதங்கு பதமென்று மனதன்றி மறவேன்

துயர்கொண்ட கோதாரி அகல அருள் புரிவாய்
கதிதங்கு எனை ஆள வருதுங்கு பரனே
கடல்தங்கு மருணசல னருள்தங்கு சுகனே
கோதாரிகொண்ட பகைதுன்ப மகல அருள் புரிவாய்
குருநாத னெனவந்த குலமறைப் பொருளே
யவ்வென்று மௌவென்று மினிய மறையென்றும்
ஏகமாய் நின்ற பர நாதனும் வந்து
சௌவென்று நௌவென்று சகலதற்பர மென்று
தானென்று நானென்று சகல கலையாகி
உவ்வென்று முயர் மறைப் பொருளதாய் நீ நின்று
ஊமையொடுக் கங்காள வேடமது கொண்டு
யவ்வென்று முச்சுடலையாடி வினைதீர்க்கும்
வங்கமடு காயவெனு மாதி வயிரவனே
அரவென்று மைந்ததளுந் தன்பர் நுதல்வேர்வை
அதனிலோ ராயிரம் சிரசு கொண்டுவந்து
உரமுந்து தக்கனுர் வேள்வியை யழித்து
உதவினோர் தங்களை வெருட்டியு மடித்து
கரமு மீரா யிரமதான புகழான்
காத்திடு முனக்கபய மாயினேனையா
வெருவுந்து கோதாரி வாராலருள் செய்
வீரனே வீரபத்திரசேவ குருவே
இலகு புகழ்சேர் முத்துமாரி யபிராமி
இயல்துர்க்கை பேச்சி காமாட்சி மீனுட்சி
கலக விழிமாது கண்ணகை கறுப்பாயி
கருதரிய வீரபத்ர காளி ரணவீரி
தலமெங்கும் மேலான காத்தவராயன்
தகுசெறி வயிரவருடன் கறுப்பண்ணன்
மதலைதங்கு குருநாதனையனுர் மங்கவரும்
அனுதினமு மருள்கிருபை தந்துதவுவீரே
வருமனது செய்த பிழை மனதுமறியாது
மலர்விழியி லுழன்றபிழை நுதலுமறியாது
கர மதனிலுற்ற பிழை கரமு மறியாது
கருதுமுடல் செய்தபிழை உடலுமறியாது
உரியபிழை செய்தது பொறுத்து மனதன்பாய்
உண்மையுடன் ஈற்கிருபை தந்துதவி புரிவீர்
பரிகலத் தாதியென வந்தவதரித் தம்மை
பாதமலரேன்று மனதே துதி செய்வோமே

அழகுசெறி கன்னனூர் மாரியபிராமி
ஆனந்தி துர்க்கையரை அந்தரி மாதங்கி
துளவணியு மாயாபுரத்தி கெவுமாரி
சோதியென வாழ்முத்துமாது கண்ணகையார்
புகளமுறு பேச்சி காமாட்சி மீனுட்சி
புகழ்கிருபைதா இவர்கள் பரிகலமனைத்தும்
அளவற்ற கோதாரி அணுகாம லென்றும்
அன்புடன் நற்கிருபை தந்துதவீரே
இளம்தலை அழுதது தனைக்கண்டு தாயார்
இன்பமொடு பால்கொடுத்தே வளர்க்கிலையோ
தலைவுள்ள பாலவர் செய்குற்றமது போக்கி
தயவுதந்தென்றுமே ஆளினை அம்மா
மலைசுற்றுமேகநற் குழலழகுமாதே
மாயாபுரத்தியே வளர் கன்னனூர் வாழ்
புளகத்தினுயர் முத்துமாரி யெனவந்த
பூவையே பேச்சியென வாழுமாதாவே
இலகுபெறு புகளில் வருகுமரி சகோதரியே
ஈசனுர் வரமதித்திருந்த பத்தினியே
திறமான வடகையனல் மீதிருந்தவளே
செகமெங்கு முய்ய அறமே வளர்த்தவளே
நறமேவு சீதான் தங்கையானவளே
நான்முகன் சிரசிலொரு சிரமெடுத்தவளே
உறைகமல பதயோக கயிலை நாரணியே
உண்மை தந்தெமையாளு முமையம்மை திருவே
அணவாத கலியாணி யதிருப நாரணி
அகிலமுழு தறமே வளர்த்த அபிராமி
மனமகிழ்ந் தன்புதரு மாயிமகமாரி
மாதரி துரந்தரி மதன கெம்பீரி
கனகநற் கயிலைவளர் காவிஞேதரியே
காளிதனை அன்பினெடு மாளுமாதாவே
எனதுபகை வினைதீர வந்த உமை அம்மையே
ஏகபரமேஸ்வரி பாதகமலர் துணையே.

*பலவரிக் காவியம் முற்றிற்று.*

# சின்னக் காவியம்

அமிர்த பரிபூரணி நளின விளி காரணி
அன்னபரிபூரணி சொன்ன மருள் பாகரி
திமிர்ததிமில் மதியென்ன நடனமிடு மகமாரி
தேவர்தொழு தேவிதன் தாளிணை வழுத்த
குமிர்த நல்வாயு மும்மதமு மிருபுயமும்
குடவயிறு நுதல் விழுயு முடைய மார்பழகும்
திமிர்தமா மும்மதத்தைந்து கரமுடையதொரு
தொந்திவயிறன் சரணமென்று நற்றுணையே
துணையான கன்னனூர் மகமாரி அம்மைதான்
தொழுதவர்க் கருள் கொடுத்தினி துகந்தருளி
இணையான தெய்வங்கள் புவிமீதிலுண்டோ
உன்கிருபை தந்துநீ எங்கள் நோய் தீர்ப்பாய்
கணையாழி கையில் தரித்தவன் தங்கையே
காவலாயிருமென்று கரத்தானை யின்ருய்
துணையாக வந்துநீ அபயமே அபயமே தருவாய்
சோதியே ஆதியே மகமாரி அம்மனே
மகமாரி என்றுனை நினைப்பார் தமக்கு
வாதமொடு பித்தஞ் சிலேற்பனங் கண்ணோய்
பகைதோஷ மானதொரு நோய் கிரக தீவினைகள்
பாடுபட்டோடுமுன் நாமங்கள் சொன்னல்
அகமகிழ்ந் தஞ்சலென் றருள்கிருபை புரிவாய்
அனலெலும் கனல்தணித் தாளும் நீ அம்மா
சகலகலை வல்லியே கன்னனூர் வந்த
சக்தியே சித்தியே கமலா சனத்தியே
கமலமுக மழதொழுது தெரிவை யுமையவளு நீ
கலைபல தெரிதொழுது மாகர சிவாய நீ
அமல பரமேஸ்பரி விமல கிருபாகரி
அரலோக பரலோக அனந்தரூபி நீ
கமலமக மேருதனை வில்லாய் வளைத்த நீ
காமனேடு தக்கன் சிரந்தனை ஒடித்த நீ
அனைவரதமுங் கிருபை தந்து ரட்சிப்பாய்
அதிகவர முடையதொரு மகமாரி யம்மனே
அதிகவர முடையதொரு தவசது புரிந்தாய்
அத்தனர் கிருபைதந் தகமகிழ்ந்தாய்

மதிவதன முடையதொரு மங்கைநீ அருளென்ன
மாமறையு முத்துநீ தாவென வுரைக்க
கதியாவு பிறைசூடு நாதலும தருளால்
கண்ணுதலு மோரொன்று சோதிக்க நல்ல
சதிரமொளி கனல் தணித் ததிகவரமே பெற்ற
சத்தியே கன்னனூர் மகமாரி யம்மனே
கன்னனூர் வந்தநீ கம்பையில் வாழ்ந்தநீ
கரகம் தொடுத்தநீ குலையது பிடித்தநீ
முன்னையே வந்தநீ முப்புர மெரித்தநீ
மூவர்தொளு மூர்த்திநீ மூவுலகை யாண்டநீ
புன்னுமரை தேவிநீ புன்னைநிழல் வந்தநீ
பங்கயன் தேவிநீ பாரளந்தவளுநீ
அன்னையே மின்னையே எனை ஆளவந்த
ஆதியே சோதியே அகில நாரணியே
நாரணி நால்வருண சாதனைக் காலால்
நவரத்ன நால்வேத நல்விரத மீந்து
பூரண மதானபொற் கும்பமது வைத்து
பூவையர்கள் மலர் சொரிந்தே கவரிவீச
வாரணத்தேவர் வலுவீரர் படைசூழ
வாசுகு தன்னைவட மாகவே பூட்டி
காரண மதான பொற் தேர்மீதி லேறிவரு
கன்னனூராட்சி காமாட்சி யானவளே
ஆச்சி நீ அபிராமி யாகவந்தாயே
ஐயனோடு பரிகலஞ்சூள வந்தாயே
பேச்சிநீ பெருமாளுடன் பிறந்தாயே
பேரான மீனாட்சி யாகவந்தாயே
காட்சிதந்தே சேரி காக்க வந்தாயே
கனல்தணித் தினித்திக வரமளித்தாயே
வாட்சி சடைச்சி யென வந்தவளும் நீயே
வடிவான ஆயிரம் கண்ணரியானவளே
ஆயிரங் கண்ணிநீ அகிலமுழுதாளிநீ
அட்ஷர மதான நீ அக்கினி தணித்த நீ
வயிறுபுயத்திநீ வேத முதலான நீ
வேதாந்த ரூபிநீ வேதனை தணித்த நீ
காயுகமலாட்சிநீ காமன் சிலைச்சி நீ
கச்சினி முலைச்சி நீ காரண நிறத்தி நீ

தாயுநீ தந்தைநீ தந்திமுகனைப் பெற்ற
தையலே மகமாரியான மகமாரியே
மாதரி புரந்தரி வரந்தரு குமாரி
மாசது விலாத் பதிபோ லழகினுலே
ஆதரி யுனுதா விலா லொருவருண்டே
ஆருவவிசேயதனை ஆளரினை அம்மா
பாதரி தரித்தபர நாதருடனுடும்
பாதமலரே துணைபராபர பவானி
நாதரி நடம்புரி நலம் புரிவராகி
நரலோக பரலோகக்காரி அம்பிகையே
அம்மைநீ அமிர்தத்தி லன்றுதித்தாயே
அழகான அலரிமலராகி வந்தாயே
செம்மைநீ தேசியின் கனியுகந்தாயே
செவ்வந்தி மலர்மீது சேர்ந்திருந்தாயே
எம்மை யாழரசன் மகளாக வந்தாயே
எழிலான எக்கிஷங் தனில் வளர்ந்தாயே
உண்மையா அக்கினி தனினுதித்தாயே
உலகு தனிலதிக வரமான நற்ஷாட்சியே
உலகுதனில் மகமாரியா யவதரித்து
ஓதரிய முத்துவகை தானது உகந்து
நலமான ஈசருக்கே முத்தெறிந்து
நாரிஉமையாய் வந்து நற்கிருபை செய்து
கலைசெறியு மாரி உருவாகியே வந்து
காத்தானை நலமதாகவே யீன்ருய்
நலமான தொட்டியன் னிடமாக வந்த
நாதநா ராயணன் தங்கையானவளே
நாதனுர் நான்முகன் கட்டளை இருந்தாலும்
நாடுமோ உனையன்றி நம்பின பேர்க்கு
வேதனைகள் முடுகுமோ நோய்பிணிகளணுகுமோ
வேறுமொரு துஷ்ட பிசாசுவினை வருகுயோ
பாதமே கதியென்று நம்பினபேர்க்கு
பயமு முண்டோ செத்தபிணமு முயிர்கொள்ளாதோ
நீதியோ உன்னை நினைப்பவர் கிடறுவர
நீதியோ சோதியோ காத்தவராயனே
காத்துநீ சேரிகனல் மாற்றவந்தாயே
கட்டாரி சொட்டையும் கையம்பு சவளம்

மாத்திரைக் கோலுடன் சாற்று பரிவட்டம்
மத்தள முடுக்கை தவில் முக்க விருதூத
நாற்றிசை களெங்கினும் கீர்த்தி ஒலிபாட
நான்மறைகளோத வெண்சாமர மிரட்ட
போற்றி செய்தே புஷ்பமாரி மழைபொழியவரு
பூலோக ராசனே ஈஸ்வரி பாலனே.

## வாழி

ஈசனுடன் நாலுமறை வேதநுதல் வாழி
இந்துமதி ஒத்தளக ஈசுபரி வாழி
வீசுபுகளுடைய ராசசிங்கமும் வாழி
விளைசென்னல் மழைபெய்து நீடூழி வாழி
வாஷமுள்ள நாடுநகரங்களும் வாழி
வரிசைபெறு விஸ்வர்குலம் மரபுமிக வாழி
ஆசுதமிழ் குற்றம்பொறுத்து நிதம் வாழி
அமிர்த பரிபூரணி வாழ வாழியதே.

## மங்களம்

அரியும் மரையும் மரையும் என்று மங்களமே
அரசர் செங்கோல் நிதந்தளைக்க மங்களமே
தெரியு மறையுன்னு சிவசமய மங்களமே
சென்னல் மழை உன்னுபுவிவாழ மங்களமே
உரைசெய் தமிழ்மாலை பகர்வொரு மங்களமே
உலகிலுள்ள நோய்பிணிகயகல மங்களமே
பரைவதூள் புவியிலருள் மேவு பரையான
பகர்முத்துமாரிபத மலரு மங்களமே.

# அம்மன் குளுத்தி

சீர்பொருந்து கைங்கரனே திருமால் மருகோனே
1 கார்பொருந்தும் யானைமுகக் கணபதியே கற்பகமே
பார்பொருந்தும் கண்ணகையார் பழிவாங்கிக் குளிர்ந்தகதை
2 ஊர்செளிக்கப் பாடுகின்றேன் ஓர் பிழையும் வராமல்
ஓர் பிழையுஞ் செய்யாத உலகுபுகழ் கோவலரை
3 பெருமழுவாத கொல்லுவித்த பிழைமாறனெனவகுத்த
கருதரிய வாயர் மனைகனல்மூளச் சாபமிட்டு
4 இருமுலையும் குளிர்ந்தகதை யானுரைக்கக் காப்போமே
காளிபிடைசூள காவரிப்பூம் பட்டணத்தில்
5 வாழ்வணிகர் தன்குலத்தில் என்மாதே குளிர்ந்தருள்வாய்
இளை வேம்பின்கீழே இருந்து வருந்தாமல்
6 வளமை பெரிதுடைய என்மாதே குளிர்ந்தருள்வாள்
நீகாமனுக்கு மகிழ்ந்தவரம் கொடுத்து
7 நாகமணி வாங்க நயந்தாய் குளிர்ந்தருள்வாய்
சொற்பெரிய மானகர் துய்யகுலத்தே யுதித்த
8 சாபமணிதான் தரித்த என்தாயே குளிர்ந்தருள்வாய்
என்னேரமு மெண்ணி மேலான கோவலர்க்கு
9 வன்னி வழிநடந்த மாதே குளிர்ந்தருள்வாய்
மாதவிக்குப் பொன்தோற்று வாழிவணிகர் தன்னுடனே
10 காதலித்துப் பின்போன என்கன்னியே குளிர்ந்தருள்வாய்
காவரிப்பூம் பட்டணத்தைக் கைவிட்டகன்ற பின்பு
11 பூத்தமலர்ச் சோலையிலே புகுந்தாய் குளிர்ந்தருள்வாய்
சாற்றரிய தக்க வுந்தியனுர் தன்னுடனே
12 பூவிரியும் சோலையிலே புகுந்தாய் குளிர்ந்தருள்வாய்
ஓடத்திலேறி உயர்காவரி தான் கடந்து
13 தேடரிய தென்மதுரை சென்றாய் குளிர்ந்தருள்வாய்
கொக்கினமும் புள்ளும் குழலோசையும் கேட்டு
14 தக்கவழி நடந்தாயே குளிர்ந்தருள்வாய்
தென்னம்பழம் சொரிய தேமாங்கனியுதிர
15 மன்னிவழி நடந்த என்மாதே குளிர்ந்தருள்வாய்
கோலப்பதி தனக்கு கோவலனுர் போனபின்பு
16 துக்கப்பதி கடந்த தோகாய் குளிர்ந்தருள்வாய்
கட்டிக்கிடந்ததொரு காற்சிலம்பு ஒன்றெடுத்து
17 செட்டிக்கோவலனுர் சென்றார் குளிர்ந்தருள்வாய்
மனைதொளிக்கும் தோழான் வணிகர்களைக் கொல்லுவித்த

18 சொற்பனத்தைக் கண்டெழுந்த தோகாய் குளிர்ந்தருள்வாய்
தேறிய கனவை திரும்ப விடைச்சிக்குரைத்து
19 சீறி மதுரையிலே சென்ருய் குளிர்ந்தருள்வாய்
தன்கணவன்பட்ட கழுந்தேடியே நடந்து
20 அன்புடனே வந்துயிரை மீட்டாய் குளிர்ந்தருள்வாய்
தட்டானுர் முன்கொண்ட தலைவர் தனையகன்று
21 பட்டீரோ என்றழுத பாவாய் குளிர்ந்தருள்வாய்
கூறும் மொழிகளெல்லாம் கோவலனுர் தான்கேட்டு
22 ஏதோ அபிமானம் என்ருர் குளிர்ந்தருள்வாய்
வாசலது பூந்து வந்த உயிர் போனபின்பு
23 பூசலிடைப் பாண்டியனைப் போனுய் குளிர்ந்தருள்வாய்
தீதறியாக் கோவலரை தென்னவனுர் வெட்டுவித்த
24 ஏதுகுறையாலோ வென்ருங் குளிர்ந்தருள்வாய்
பட்டேன் பழியெனவே பாண்டியனும் போய்விழுந்தான்
25 கொண்டாளோ கண்ணகையாள் கோவலரைக் கொன்றதற்
தட்டான் பொடியாக தார்வேந்தன் நீருக [காய்
26 தட்டானைச் சுட்டெரித்த தாயே குருர்ந்தருள்வாய்
நல்லவரம் தங்கள் முன்னே நாகமணி தான் வாங்கி
27 கொல்லாமல் பாண்டியனைக் கொன்ருய் குளிர்ந்தருள்வாய்
எண்ணில் வரும்பழிக்கு எண்ணவொண்ணுப் பழிவாங்கி
28 சொல்லரிய தென்மதுரை சுட்டாய் குளிர்ந்தருள்வாய்
ஓடியே ஏழுகதவடைத்தான் பாண்டியனும்
29 ஏழுகதவூடுருவ மார்புருக தைத்ததுவே
சதிகேடு செய்தவினை வேந்தனை யகன்ற பின்பு
30 பொதுவரிடம் தனிலே போனுய் குளிர்ந்தருள்வாய்
வாளொன்றெடுத்து வலமுலையைத் தானரிந்து
31 கோலாடைபாகத் துணிந்தாய் குளிர்ந்தருள்வாய்
அரிந்த முலையோடும் சொரிந்த குருதியுடன்
32 இடையகந்தனிலே ஏந்திளையும் சென்றனளே
விரைந்துமலை புகுந்து வெண்ணை தனையள்ளிவந்து
33 அரிந்த முலையதனில் அங்கவளும் அப்பினளே
மதுராபுரித் தெய்வம் வால்மதனை தான்கேட்டு
34 சதுராக வேகந் தணிந்தாய் குளிர்ந்தருள்வாய்
ஆயர்குலப் பாவையரின் அன்னமே தார்குழலே
35 தூயவனச் சோலை அடாதே குளிர்ந்தருள்வாய்
எச்சேரிவேகிலும் மிடைச்சேரி வேகாமல்

36 பட்சேரி வேகிலும் பறைச்சேரி வேகாமல்
என்முலை குளிர்ந்தாப்போல் நீரும் குளிர்ந்தருள்வாய்
37 சொற்பெரிய மானுகர் துய்ய குலத்திலுதித்த
கற்புநெறியுடைய என் கன்னி குளிர்ந்தருள்வாய்
38 எண்ணுமற் செய்தவினையால் இணைமாறன் பதியளித்து
நன்ரு யபிமானம் நயந்தாய் குளிர்ந்தருள்வாய்
39 கூடலது கடந்து கோவலரைத்தான் கண்டு
ஏது மபிமானம் மென்ருய் குளிர்ந்தருள்வாய்
40 தன்கணவன் பட்டதிசை யதனைத்தான் நோக்கியே
பொன்னுலகம் வீற்றிருக்கப் போனுய் குளிர்ந்தருள்வாய்
41 தேவர்களெல்லாம் திருவாகனத் தேரேறி
கோவலரை நீங்காத என்கோதாய் குளிர்ந்தருள்வாய்
42 வாராய் புருவினமேமனர் மாதியைக் கைத்தொழுவோம்
ஓதாய் புருவினமே ஓம் நமசிவாய மென்றும்
43 கோலப்புருவே கோடுவரா வெற்றிலையே
அண்டனைய கோபம் என்கோதாய் குளிர்ந்தருள்வாய்
44 கொண்டனைய கோபம் என்கோதாய் குளிர்ந்தருள்வாய்
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோட
45 மூங்கில்போல் சுற்றமும் முசியாமல் வாழியவே
பாடினேர் வாழி பழுதகற்றினேர் தான் வாழி
46 கேட்டோர்கள் வாழி கிளைமன்னர் வாழியதே.

*அம்மன் குளுத்தி முற்றிற்று.*

ஸ்ரீ நிரஞ்ஜன அச்சகம், நல்லூர், யாழ்ப்பாணம்.

உ

தேவி துணை

# சன்னி, பேய், பிசாசு, தோஷம் முதலிய சகலவற்றிற்கும்

# சூனை அடிக்க.

அரி ஓம் நமோ! பச்சை நிறமும் பவளவாயும், அரையில் கட்டிய சந்திர காவிப்பட்டும் ஒட்டியாணமும் மார்பிலிட்ட நூல் மாலையும் கழுத்திலிட்ட ஆபாணமும் காதிலிட்ட கவசகுண்டலமும் கிரீடமும் திகளேந்திய இளமாது முல்லையும் நவரத்தினமாகிய பல்லும் மூக்குத்தியும் சிலம்பும் சிங்கக்கொடியும் மானொருகை மழுவொருகை சங்கொருகை சக்கரமொருகை அன்பர்க்கு சொர்ணமளித்திடுகரமும் மஞ்சாதென்னும் மத்தியகரமும் துலங்கிய விபூதியுமாய் எழுந்தருளியிருப்பாள் யென்னம்மை மோகாம்புரி மாங்கிஷமாது நீயே சிவாகா ஓம் அங்ங றிங்ங மத்தே சாத்தே மரிசெய் சாத்திரி நீலி நீலி மோகாம்புரி நீலகண்டி மோகாம்புரி தூளி தூளி தூளி தூராளி உச்சாடு உச்சாடு பூதப்படையும் போகாவிதியும் பீச்சி பித்தத்தீயும் பிடிசன்னியும் சனீத்த சன்னியும் சன்னிவகை பதினெட்டும் விட்ட பிசாசு வைத்த சூனியமும் ஆலகாலமரத்தில் ஆணி அறைந்ததும் மண்துறையில் புதைத்த பல பல சூனியமுள்ளதும் வயிற்றுக் கழிச்சலும் மலஞ்சலம் மறிபட்டதும் எட்டுக் குழறியும் கூடிய நஞ்சும் வேதாள பூதமும் மூன்று கப்பிளவை முன் கண்டமாலை காலடியரிப்பு அரையினில் புத்துடன் பத்தெளுர் துடையினில் படுவன் தொண்ணூற்றுறும் ஐனூற்றன்பது நாளுவலியும் கன்னக்கிரந்தியும் கனலை கண்ட மாலையுமின்றி எழுந்திடு மீளா வியாதியும் இருமல ரோகம் எண்பத்துமூன்றும் தலைவலி சூலை தண்டுப்பிளவையும் அண்டவாதம் அடங்காத கழிச்சல் பொதிக்கரப்பான் புத்துடன் கண்வலி காயாம் பூக் காச்சல் கண்ணில் சிகப்பு விழிகண் குருடு விழி மீனுமினுங்கல் குவளைச்சலந்தி குத்துவிப்புருதீ நாகபடலம் நத்தைப்படுவன் புருவ வாதம் புகை எழும் புண்ணும் சுருக்குடன் இளைப்பும் முடக்கிய வாதம் முப்பத்துமூன்று எழுந்திடும் வியாதி எழுபத்திரெண்டு தோன்றியவியாதி தொண்ணூறுது பிறமுனை கட்டு கட்டு கரிமுகனே வெட்டு வெட்டு வேலாயுதத்து ஆணை சுட்டெரி சுட்டெரி ஏனெடா கெடுவா னானெடா மோகாம்புரி தீண்டாதவரை தீண்டுவதேதடா சிவனடியாரை அணுகுவதேதடா திருநம்பிமாய ஐயன் கோவில் அதிரப் பிடுங்கி மற்றுமுள்ள கோவில் மண்டு தீயிட்டு சாமுண்டி கோவில் தளலாயெரித்து உள்ளூறங்கள் பேசி வந்தேன் வாளாலறுத்திடு விழியாலெரித்திடு சிந்தீயிற் தீயால் சினக்கும் மோகாம்புரி அம்மை கரத்தாலறுத்த மோகாம்புரி எரி எரி திரிபுரமெரிய அகோர உருத்திசாயா நமோ ஓடம்மா ஓடு.

அம்மன் உற்பத்தி முற்றிற்று.

# சூடாமணி
# உள்ளமுடையான்

இதில் நட்சத்திர நிகண்டு, இராசி நிகண்டு, கிரக நிகண்டு, யோகங்கள் கணிக்கும் விதி, திதி, ராசிப் புணர்ச்சி சக்கரம், முகூர்த்த விதானங்கள், விவாகம் செய்ய, காது குத்த, பூமி தரிசனம் செய்ய, விதை விதைக்க, கதிர் அறுக்க, தானியம் கொண்டு வர, தானியம் வாங்க, யாத்திரை செய்ய, மாடு, ஆடு, முத லானவை வாங்க, விற்க, வீட்டிற்கு நிலம் எடுக்க, வீடு கட்ட, குடிபுக, கிணறு வெட்ட, கிணற்றிற்குரிய இடம், வகுக்க, விவாகப் பொருத்தம் பார்க்க, சங்கராந்தி பலன், ஜென்ம நட்சத்திர பலன், கிரகபரி வேடக்குறி பீறைக்குறி, மனைப்பொருத்தம், பஞ்சபக்ஷி பலன், பஞ்ச பக்ஷி புணர்ச்சி சக்கரம், பேர்பொருத்தம், நட்டமுட்டி சிந்தனை பூசல்லிய சக்கரம் பலனுடன், பூசல்லியமுட்டி காலசக்ர ஆண்டும் பலனும் சக்கரத்துடன், திசாபுத்தி, அந்தர பலன், கிரகங்கள் ஒன்பதுக்கும் உரிய கணிதம், கிரகசாந்தி முறை, கிரகண பலன், சத்துரு நாசம், கள்வர் பெயர் அறிவது ஆகியவை போன்ற 300 சோ திட சம்பந்தமான விஷயங்களைத் தாமே பார்த்து பலன் அறியுமாறும் சோதிடர்களும் இவ் விஷயங்களை இந் நூலில் கூறியவாறு பலன்களை கூறினல் பலன்கள் ஒருபோதும் பிழையாகாது.

**விலை ரூபா 3-50** [தபாற்செலவு 50 சதம்]

சோதிடமென்பதே என்னவென்று தெரியாதவரும் பிறர் உதவியின்றியும், சோதிடர் உதவியின்றியும் தங்கட்கு வரும் நன்மை தீமைகளை அறியவும் சாதகக்குறிப்பு எழுதவும் மற்றும் சோதிட விஷயங்களிலும் 60-நாட்களில் வல்லவர்களாகத் திகழ

பிரம ரகசிய

# சோதிட அரிச்சுவடி

(9 பாகங்கள்)

என்னும் புத்தகத்தில் சோதிடம் தெரியாதவரும் ஜாதகம் கணிக்க, அஷ்டவர்க்கம் கணிக்க, கோசார பலன், பன்னிரு பாவ பலன், நட்சத்திர பலன், திதிபலன், யோகபலன், வார பலன், மாத பலன், கரண பலன், பாவ பலன், திசாபுத்தி பலன், கிரகங்களின் குணசாகா விளக்கம், பிறந்த குழந்தை ஆணு பெண்ணு என அறியும் விபரம், பெண்கள் ஜாதகங்களில் அழகு, பதிவிரதை, நடத்தை, புத்திரர், மலடி, அமங்கலை, குணம், ஆரூட பலாபலன் விபரம் ஆகியவைகளையும் இன்னும் அனேக சோதிட சம்பந்தமான விஷயங்கள் அனைத்தும் இந்த ஓர் சோதிட நூலில் மட்டுமே அடங்கியுள்ளது.

பிறர் உதவியின்றி தங்கட்கு தாமே சுலபமாக அறியக் கூடியவாறு பலசக்கரங்களுடன் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

தமிழ் பண்டிதரும், நேட்டிவ் டாக்டரும், பஞ்சபக்ஷி கணித சோதிடரும், பல சோதிட, வைத்திய, மாந்திரீக நூல்களுக்கும் ஆசிரியராகிய ஸ்ரீமான் கொரக்கோட்டை **ப. வடிவேல் செட்டியார் அவர்களால்** இயற்றப்பெற்ற இந்நூல் நல்ல கடிதத்தில் அச்சிட்டு உயர்ந்த பைண்டிடுடன் கூடியது.

**விலை ரூபா 3.50** [தபாற்செலவு 50 சதம்

---

## சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு. : : கொழும்பு-11.